**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.71/2020**

2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 08 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: திரு.ஆறுமுகம் (அ.சா.9)** | **தொழில்** | **: இஸ்திரி தொழில்** |
| **த/பெ., க/பெ.** | **: கூடலிங்கம்** | **வயது** | **: 46** |
| **கிராமம்** | **: புது நகர், பழனி** | **இனம்** | **: ஆண்** |
| **தாலுகா** | **: பழனி** | **நாள்** | **: 08.01.2025** |
| **மாவட்டம்** | **: திண்டுக்கல்** | | |

**எதிரி முன்னிலையாகியுள்ளார்.**

**முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**நான் பழனி புது நகரில் குடியிருந்துகொண்டு இஸ்திரி செய்யும் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பமும் என்னுடையதுதான். 29.06.2016 ம் தேதியன்று மாலை நேரம் கேம்ப் இறக்கம் சத்யா நகர் ரயில் கேட் அருகே பழனி டவுன் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என் உறவுக்காரப் பையன் வெட்டுப்பட்டது சம்பந்தமாக போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5.**

**(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 29.06.2016 ம் தேதியன்று மாலை 5.15 மணிக்கு நானும் பழனியை சேர்ந்த செல்வன் என்பவரும் புது தாராபுரம் ரோட்டில் உள்ள ரயில்வே கேட் அருகில் நின்றுகொண்டிருந்தபோது பழனி நகர் காவல் நிலைய குற்ற எண்.524/2016 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை பழனி நகர் காவல்நிலைய ஆய்வாளர் கைது செய்து விசாரித்தபோது எதிரி தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், மேற்படி செல்வன் என்பவரும் சாட்சி கையொப்பம்செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தேதியில் மாலை 6.05 மணிக்கு எதிரி மறைத்து வைத்திருந்த ஆயுதத்தை கைப்பற்றியபோது அதிலும் நானும், மேற்படி செல்வமும் சாட்சி கையொப்பமிட்டோம் என்றும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.01.08 19:00:53 +0530